9 - JUN1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை 1981 ஏப்ரல் 2

பங்குனி 20, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்மிகு பேரவைத் தலைவர் :

''உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களம்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்''

கற்று வல்லவர் அவைக்களத்திற்கு அஞ்சி, தாம் கற்றவைகளைக் கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்ல முயல வேண்டும், இவ்வாறு சொல்ல இயலாதவர் உயிரோடு இருந்தாலும், செத்தவராகவே கருதப்படுவர்.

(1) வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தேர்தல் கலவரங்கள்

*வினா எண். 592—திரு. கே. ஆர். சுந்தரம் : திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 மே மாதத்தில் தமிழகத்தில் நடைபெற்ற சட்ட மன்ற தேர்தலின் போது கலவரங்கள் நடைபெற்றனவா ?

(ஆ) அதனால் எவ்வளவு பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் ?

(இ) எத்தனை பேர் இறந்தனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :— (அ) ஆம்.

(ஆ) மொத்தம் 1,035 பேர்கள் பாதிக்கப்பட்டனர். படு காயமடைந்தவர்கள் 38 பேர்களும், சிறு காயமடைந்தவர்கள் 986 பேர்களும், கொலையுண்டவர்கள் 11 பேர்களும் இதில் அடங்குவார்கள்.

(இ) இறந்தவர்களின் எண்ணிக்கை 11 பேர்கள் மட்டும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : இப்படிப்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் போக்கில் பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் வழங்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் இனியாவது வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 உதவி நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்டவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5,000 கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். சிறு காயம் அடைந்தவர்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : படுகாயம் உற்றவர்கள் குடும்பத்தினருக்கு ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் உதவி நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : 1980-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது நடைபெற்ற கலவரங்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமுற்றதாகவும், 11 பேர்கள் இறந்ததாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், எந்தெந்த இடங்களில் அந்தக் கலவரங்கள் நடந்தன ? அதனால் அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கலவரங்கள் நடந்த இடங்கள் அவ்வளவையும் எடுத்துச் சொல்வது என்பது அப்படி குறிப்பிட்டுக் காட்ட இயலாது. ஆனால் 11 நபர்கள் இதில் கொலையுண்டிருக்கிறார்கள். அதில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆறு பேர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் ஒருவர். இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர் ஒருவர். கட்சி சார்பற்றவர்கள் 3 பேர்கள். ஆக 11 பேர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் 11 பேர்களை கொலை செய்தவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு பல்வேறு பிரிவுகளின்படி ஆங்காங்கு வழக்குகள் தொடரப்பட்டு வழக்குகள் விசாரணையில் இருந்து வருகின்றன. கட்சி சார்பற்றவர் ஒருவர் கொலை செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றது. இந்திரா காங்கிரஸ் ஊழியர்கள் வாக்கு சேகரிக்கும் போது கவுண்டர்களுக்கும் தேவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் திருமதி தாத்தம்மாள் கல்லெறியப்பட்டு பலத்த காயமுற்றார். சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 18—5—1980-ல் மரணமடைந்தார். குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்

பட்டனர். இக்குற்றம் குறித்து தேனி காவல் நிலையத்தில் குற்ற எண் 312/80 பிரிவு 147, 336, 323 இ.பி.கோ.வின்கீழ் வழக்கு தொடரப்பட்டு மதுரை கூடுதல் செஷன்ஸ்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டனர்.

திரு. குத்திரியப்பன் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் தேர்தல் அலுவலகம் கட்டும் போது ஏற்பட்ட சண்டையினைத் தொடர்ந்து திரு. குத்திரியப்பன் முருகன் என்பவரால் கத்தியால் தாக்கப்பட்டார். சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கபட்டு 18—5—1980 அன்று மரணமடைந்தார். குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து ஒட்டன் சத்திரம் காவல் நிலையம் கு. எண் 151/80 பிரிவு 324, 302 இ. பி. கோ. வின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. மதுரை கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார் மற்ற விசாரணைகள் எல்லாம் வழக்கு மன்றத்தில் இருந்து வருகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்திலே நடந்த சட்டமன்றத் தேர்தலின் போது எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் அகமத் பாஷா என்பவர் (* * * * * * * *) உயிரோடு பெட்ரோல் ஊற்றி எரிக்கப்பட்டார் என்பது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வழக்கு மன்றத்திலே இருக்கிறது. எரிக்கப்பட்டது உண்மையா என்று கேளுங்கள். * * * என்பதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இந்த வழக்குகள் காவல் துறையின் எப்.ஐ.ஆர்.-ல் இருக்கிறது. அரசியல் தலையீட்டால் முறைப்படி வழக்கு போடவில்லை என்று இரண்டுபேர்கள் மீது நீதி மன்றத்தில் 164 சட்டத்தின்கீழ் வழக்குகள் போட்டுள்ளனரா ? இறந்த அகமத் பாஷா குடும்பத்திற்கு நிவாரணம் அளிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு திருத்தம்—வாகைக்குளம் பதிலை முதலில் தவறாகச் சொல்லிவிட்டதற்கு வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். வாகைக்குளம் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்குதான் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, தேர்தல் கலவரத்தில் ஈடுபட்டு, இறந்தவர்களுக்கு நிதி வழங்கப்படுவதில்லை. எனவே, இதிலே நிதி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.